01-1-1990

Subscription.
Inland: Rs. 100/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q/J/104/News/89
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 29 DECEMBER 1989 No. 52
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## World Council of Churches on Sri Lanka Situation

Dr. Emilio Castro, the General secretary of the world council of churches has released the following statement on Sri Lankan situation.

The world Council of Churches is deeply distressed over the continuing violence in all parts of Sri Lanka, the terrible human suffering, the break-down of normal life and the widespread atmosphere of fear.

The Council understands that the causes of this deplorable situation are a break-down of the democratic process during the last decade, the ethnic conflict which was the consequence of the failure to appreciate the pluralistic nature of Sri Lankan society and the lack of a just and fair sharing of economic resources and opportunities.

The Council urges

1. — respect for human life, the exercise of restraint and all violence as means of solving problems,
   — the lifting of all laws and regulations which vitiate the basic rights and security of individual persons, and
   — the start of a truly democratic process of consultation and sharing of political power in which all groups can take part;
2. — a determined effort to build Sri Lanka as a pluralistic nation and the full implementation of the process already begun towards devolution of political power within the framework of one, united Sri Lanka;
   — a concerted effort towards the establishment and maintenance of peace and normalcy in the North and East after the departure of the Indian Peace Keeping Force, by all Tamil militant groups as well as by the Government of Sri Lanka in a spirit of co-operation;
3. — a new socio-economic policy that assures justice so that the poorest sections of the population may be given a fair share of the resources and the opportunities of the nation.

The World Council of Churches assures

1. — All people of Sri Lanka of its genuine concern and of its continued prayers for an end to the present time of great suffering and for a future of peace and justice,
2. — The churches in Sri Lanka of support for their stand for human rights, justice and reconciliation as well as for their efforts to minister to those who suffer and are in need because of the present turmoil.

## NEW BISHOP OF MADRAS DIOCESE.

The Rev. Masilamani Azariah has been appointed as the new Bishop of the Madras Diocese of the C. S. I, succeeding the Rt. Rev. Sunder Clarke who retired a few months ago.

The Rev. Azariah has been a well known figure in the C.S.I, and in the world Church as the General Secretary of the C.S.I. Synod from 1984 onwards. Earlier he was Secretary of the Tamilnadu Auxiliary of the Bible Society of India from 1977—1982.

Born in 1934 the Rev. Azariah took an Economics degree from the Madres Christian College in 1957 and the B D. degree from U. T. C. Bangalore in 1961. He obtained the S. T. M. in systematic Theology from Virginia Episcopal Seminary U. S. A in 1967 and the M. A in English Literature of the University of Madras in 1978. He was ordained Deacon in 1961 and as Presbyter in 1962. The Rev. Azariah married Josephine (Edwards) a Science graduate and a teacher in 1965 and has two sons and a daughter.

The Rev. Azariah has a rich Ecumenical experience from his S. C. M days. He was a delegate to the Sixth Assembly of the W.C.C in Vancouver in 1983 and to the world Conference on Mission and Evangelism, San Antonio in 1988. In recent years he has been a valiant fighter for the Cause of Dalits both within and outside the Church and has written numerous articles and books on the subject.

The Rev. Azariah has visited Sri Lanka and the Jaffna Diocese on many occasions, the last visit being in the company of the Moderator Bishop Premasagar in [illegible]

## Mr. R. M. Gunaratnam.

The death of Mr. R.M. Gunaratnam occurred on 16th November 1989 in Oldham, Lancashire (U.K.) at the home of his daughter Sajo and son-in-law Dr. Joe Jayaratnam. Mr. Gunaratnam was formerly Vice-Principal of Hartley College, Point Pedro. 'R. M. G' was the term of affection his colleagues and students used in referring to him.

The funeral service took place on 22nd November at St. Mathew's Church, chadderton, and was conducted by the Rev. David Sharphs. Among the three hymns sung was 'I am thine, O Lord,. I have heard thy voice', R.M.G's favourite. The Rev. S. S. Kaurnairaj who gave the tribute spoke of Mr. Gunaratnam's many good qualities and his contribution to the church, the community and his school. He was a kindly man who was above all pettiness-he would never harbour rancour even against people who might have hurt him. He had a great capacity to get on with youngsters; he loved children and was loved by them in return — 'He became a child in the midst of children'.

The Rev. S. S. Karunairaj also said he was an excellent teacher of Physics and Mathematics who not only taught his subjects well and produced results, but was also a very caring person interested in the welfare of his pupils. This was revealed by the fact that 'old boys' of his in England took time off their busy schedules and travelled long distances to call on the family and attend his funeral.

R. M. G served his God and the church with devotion. He and his wife took pleasure in giving of their income, their time and even their garden produce to the church and her ministers. They also helped needy neighbours in a quiet and unobtrusive way.

The burial took place in the churchyard of St. Matthews. Mr. Gunaratnam leaves behind his sons Marcus, David and daughter Sajo, son-in-law Joe, daughters-in-law Karmini, Cumudhini and grand children Michael, Praveeni, Darrell and Dushyanthy. (Contributed.)

## Navajeevanam ......

( Continued from 22.12.89 issue )

The day following, 30th November at 4 p. m., Carols were sung at the Holy Carpenter Church. The Christmas Message was delivered by Mr. K. A. Selvanayagam, worker-in-charge, C. S. I. Nunavil who also rendered a solo in line with the theme of his message, namely, 'The Morning Star & the Wise Men.' As a prelude to the message he struck a personal note relating to the 16 years he spent at Navajeevanam, first as a Student, then as Warden of Hostels and finally as a theological student.

In connection with Navajeevanam news, it may be stated that Mr. & Mrs. David Newby

(Contd. on Page 4)

*AT REST:*

## Dr. D. S. Sanders.

We regret to record the death which occurred on 14. 10. 1989 of Dr. D. S. Sanders (61), Dean of the University of Illinois, School of Social Work, eldest son of Mrs. Harriet Sanders presently in Australia and of the late Mr. D. S. Sanders, formerly Vice-Principal of Jaffna College, Vaddukoddai. He died while attending a Symposium in San Francisco. Dr. Sanders has been a member of the U I faculty since January 1987. He was formerly at the University of Hawaii, Honolulu, USA.

The U I Chancellor, Morton W. Weir has said on his death, "Besides his qualities of leadership and scholarship, Dan was a wonderful human being and that's the quality I will miss the most."

The Funeral took place at the Renner-Wikoff Chapel, Urbana. The Rev. Robert McNamara officiated. The remains were interred in Mount Hope Cemetery Urbana.

He leaves behind his wife Christobel (nee Nesar Niles), two brothers - Dr. S. C. Sanders of Great Britain and H. B. Sanders of Australia and two sisters, Pearl Kanagarajah and Rhea Ratnarajah, both of Australia.

Dr. Sanders was the first Executive Secretary of the Christian Institute for the study of Religion and Society founded at the Christa Seva Ashram, Chunnakam by the Jaffna College Board of Directors.

He is an old Boy of Jaffna College, Vaddukoddai and graduated from the University of Ceylon in 1953. He was sub-warden of Brodie Hostel, during his University days in Sri Lanka.

He had served as President and Founder of the Inter-University Consortium of International Development and as its President, he accepted the MESSENGER OF PEACE AWARD in 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய தாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

மலர் 149 | 29 - 12 - 1989 | [இதழ் 52


## சிந்தனை 44.

ஏசாயா 6:1—8.
நியான வாக்கியம் 6:3.

ஒரு போதகர், தன் சபையார் ஒருவரின் வீட்டிற்குள் பிரவேசிக்கின்றார். கதவு பூட்டப்பட்டிருக்கின்றது. சினிமாப்பாட்டுச் சத்தம் வீட்டினுள் தொனித்துக் கொண்டே இருக்கின்றது. கதவைத்தட்டுகின்றார். சிறிது நேரத்தின்பின் ஒருவர், யன்னலால் எட்டிப்பார்த்துவிட்டு உள்ளே ஓடுகின்றார். ஐந்து நிமிடநேரம் தாமதமாகி இல்லத்தலைவி வருகின்றாள். ஐயா, சிறிது உட்காருங்கள் என்று கூறிவிட்டு, அவளும் உள்ளே போய் விடுகின்றாள். பத்து நிமிடங்களின் பின், ''உள்ளே வாருங்கள்'' என்று பணிக்கின்றாள் அந்தஇல்லத்தலைவி.

அதிக நேரம் தாமதமாகி விட்டேன்; வேறு இல்லங்களையும் சந்திக்கவேண்டும்; மூன்று வாரங்களாக உங்களை ஆராதனையில் காண வில்லை, உங்களுக்கு ஏதாவது சுகவீனமா என்று விசாரித்துப் போக வந்தேன் என்றார் போதகர்.

இல்லை ஐயா தம்பி வெளிநாட்டால் வந்தவர். அவருக்குச் சமையல்-சாப்பாடு செய்து கொடுப்பதில் கவனமாக இருந்ததாலும் விருந்தினரை வரவேற்பதில் கரிசனையாக இருந்ததாலும் ஞாயிறு வந்து போனதையே மறந்துவிட்டேன் என்று அவளிடமிருந்து பதில் வந்தது.

''தாயே! நீங்கள் வாழ்ந்துகொண்டிருப்பதை மறந்து விடக்கூடாது'' என்று அந்தப் போதகர் கூறிவிட்டு, இல்லத்தை விட்டு வெளியேறினார். வறுமையும் தேவையும் இருக்கும் போது, இறைவனைத் தேடுபவர்கள்—தங்களை ஒப்புக்கொடுத்து வாழுபவர்கள், செழுமையும் கொழுமையும் வந்ததும், இறைவனைத் தேடும் ஆர்வத்தை மறந்து விடுவார்கள்.

இத்தகைய மனப்பக்குவத்தை உடையவர்களாகவே, கி மு எட்டாம் நூற்றாண்டு மக்களும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களின் வாழ்வைத் திசைதிருப்பி, இறை வழிப்படுத்தும் துடிப்புக்களாகவே ஆமோஸ், ஓசியா, ஏசாயா, மீகா ஆகியோர் செயல்பட்டார்கள். வெவ்வேறு அடித்தளத்தில் நின்று செயல் பட்டார்கள். இறைவாக்குனன் ஏசாயா, பரிசுத்தம் என்ற உணர்வில் நின்று செயல்படத் துடித்தான். துடிப்பான உணர்வோடு எடுப்பான இளைஞனாக, இறை விடுப்பை எதிர் நோக்கி, புத்தாண்டு விழாவன்று ஆலயத்தில் நிற்கின்றார்.

இராசாதி இராசனாக, அரியணையில் வீற்றிருக்கும் இறைவனிடம் தன் சிந்தனையையும் செயற்பாட்டையும் ஒப்புக்கொடுத்து நிற்கின்றார். ஒப்புக்கொடுத்த ஏசாயா இறைவனுடைய தரிசனத்தையும் அழைப்பையும் பெற்றார். அரியணையில் வீற்றிருக்கும் இறைவனைப் போற்றிப் புகழும் சங்கீத ஆசிரியரின் தெய்வீக தரிசனத்தை ஏசாயா கண்டு அனுபவித்தார்.

புதுவருடப் புகுவிழாவில் கூடியிருந்த அனேக மக்களின் மத்தியில் ஒரு ஏசாயாவுக்கு மட்டும் அரியணையில் வீற்றிருக்கும் இறைவனைத் தரிசிக்கும் போது ஏன் கிடைத்தது.

பாவிகளை இறைவன் தேடி வருகின்றார் என்பது பொதுவான உண்மை. பாவத்தில் இருந்து பாவி விடுபடவேண்டும் என்றும், ஏனையோரை விடுவிக்கவேண்டும் என்றும் உள்ளூர உணர்ந்து, இறைவனுடைய வழிநடத்துதலுக்குத் தன்னை விட்டுக் கொடுத்து நிற்கும்போது, அவனைத் தன் செயற்களமாக்க இறைவன் விரும்பி அழைப்பது சிறப்பான உண்மை.

இறைவன், தனது செயற்களமாக ஏசாயாவைப் பயன்படுத்தும் சிறப்பான உண்மையைத் தொனி செய்கின்றது ஏசாயா 6:2-5. நாட்டுக் கூத்துகளில், அரசன், அரச அவைக்கு வருவதற்கு முன் கட்டியக்காரன் கட்டியம் கூறுவான்.

''இராசாதி இராச, இராச விர்ப்பன்ன, இராச கெம்பீர, இராச மாத்தாண்ட, இராச இராசசேகர, இராசாதி இராசா அவைக்கு வருகின்றார்.'' மேற்கூறிய யாவும் அரசனின் மாட்சிமையை வெளிப்படுத்தும் புகழாரங்கள். இஃது போன்று இறைவனுடைய பரிசுத்தத்தையும் அதன் அழுத்தத்தையும் கூறுவதற்கு வார்த்தைகள் இல்லாததால் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று விண்தூதர் வாழ்த்தினார்கள்.

பரிசுத்தத்தைத் தேடி அலைந்த இறைவாக்குனன் ஏசாயாவுக்கு இறைவன் தனது பரிசுத்தத்தை அறியத் தந்தது மட்டுமல்ல அவனைப் பரிசுத்தம் செய்தும் வைத்தார். ஏசாயா 6:6-7. பரிசுத்தம் செய்து வைத்தவர் புதிய வருடத்தில், பரிசுத்தரால் தெரிவு செய்யப்பட்ட அவருடைய சனத்தைப் பரிசுத்தம் செய்ய யார் முன்னேறி வருவார் என்று, மனித சுயாதீனத்தை மதிப்பவர் அழைப்பு விடுகின்றார்- ஏசாயா 6:8.

இப்பொழுதெல்லாம் அடித்தளத்தில் இருந்த ஏசாயாவின் இறை பணியின் உணர்வு, மேற்தளத்திற்கு வருகின்றது. ஏசாயாவிடம் இருந்த உணர்வுக்கு, எண்ணை ஊற்றும் பணியை இறைவன் செய்து, இறை உறவை விட்டுப்பிரிந்து, அசுத்த வாழ்வைத் தேடி அலையும் மக்களை மீட்கச் சித்தமானார்.

ஆண்டுகள் நம்மைக் கடந்து செல்லுகின்றன. நாமும் சமூகமும், ஆண்டுகளைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். கடப்பு ஆண்டுகளை இறைவனிடம் ஒப்புக்கொடுத்து, நடப்பு ஆண்டை இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுவதில் எத்துணை ஆர்வம்.

புதிய ஆண்டில், இறைவனுடைய பரிசுத்தமான பணிக்குத் தனிப்பட்டோராக-சமூகமாக ஒப்புக் கொடுத்து வாழும் போது, இறைவனுடைய தரிசனம் கிட்டும். இதைத் தொடர்ந்து, சுத்திகரிப்பும் அழைப்பும் வரும்.

இறைவனுடைய அழைப்பு, அரசியல்-சமூக-சமயவியலில் புதிய மாறுதலை ஏற்படுத்தும் என்று அறிந்து புதிய வருடத்தை வரவேற்க ஆயத்தப்படும் நாங்கள் அனைவரும், இறைவாக்குனன் ஏசாயாவுடைய மனப்பக்குவத்துடன் ஆலயம் செல்வோம் ஆலயத்தை நிரப்பும் இறைவனுடைய இராசரீகத்தின் மாட்சிமையுணர்ந்து, உறுதி தளராது செயல்படுவோம்.

ஆ. வே. இயேசுதாசன்.

## அமரர் அருள் திரு. S.R. ஹிச்கொக் அவர்கள்.

—S. S. செல்லத்துரை.—

(வண. ஹிச்கொக் போதகர் அவர்கள் மரித்த 50 ஆண்டு நிறைவு ஆராதனையில் வழங்கப்பட்ட புகழ் அஞ்சலியின் சுருக்கம்.)

1865 ஆம் ஆண்டு தை மாதம் 17 ஆம் திகதி கொடிகாமத்திற் பிறந்து, சாவகச்சேரியை இருப்பிடமாகக் கொண்ட கனம் ஹிச்கொக் போதகர், போதகர் அம்மா ஆகியோரை நன்றியுடன் இன்று நினைவு கூருவது சாலவும் பொருந்தும்.

''பண்ணிய பணியில் புண்ணியம் தெரியும். என்பது முதுமொழி. இவரது தந்தையாரின் சிறந்த குணசீலங்களே இவரை, அருட் செய்தியை அறிவிக்கும் திருப்பணியாளனுக்கியது. யாழ். கல்லூரியில், டாக்டர் சாமுவேல் கௌலண்ட் ஐயரிடம் இறையியல் கற்றார். இறைவனின் சித்தம், இவர் சித்தத்தைத் தெளிவுபடுத்தியது. இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர் வேறென்ன செய்ய முடியும்? 'பாகல் நட்டால் சுரக்காய் முளைக்குமா?

தென் இந்திய ஐக்கிய சபையின் யாழ். சபாசங்கத்தின் ஊழியனுகக் கடமையாற்றிய இவருக்கு, 1906-ம் ஆண்டு குருத்துவ அபிஷேகம் கொடுக்கப்பட்டது. இவரது திருப்பணி, முதலில் உசன் திருச்சபையில் தொடங்கியது. அதன்பின் அச்சுவேலி, வேலணை, தீவுப்பற்று ஆகிய சபைகளில் பணியாற்றினுர். 1913 இல். உடுப்பிட்டிச் சபையின் பொறுப்பையேற்று, 1915 வரை சிறந்த பணியாற்றினுர். பின்னர் 1915—1918 ஆம் ஆண்டுவரை நவாலிச் சபையில் பணியாற்றினுர். 1918 இல் மீண்டும் உடுப்பிட்டிச் சபைக்கு அனுப்பப் பட்டார். இச் சபையில், 1928 ஆம் ஆண்டு வரை பத்து வருடங்கள் நற்பணியாற்றினுர். பின்னர், 1928—1931 வரை சாவகச்சேரியில் ஊழியஞ் செய்தார். பின்னர், 1931 தொடக்கம் சில காலம், நிரந்தரமற்ற ஊழியனுக மூளாய், சுதுமலை, சாவகச்சேரி ஆகிய சபைகளில் ஊழியம் புரிந்தார். 1939 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி, இறைவனின் திருவடிகளை அடைந்தார்.

இவருடைய இறுதியாராதனை, கனம் E. K. யேசுதாசன், இவரின் மகன் கனம் L.N ஹிச்கொக். கனம் R.C.P. உவெல்ச், கனம் ஜேம்ஸ் மேதர், கனம் S. S. சோமசுந்தரம் ஆகியோரால் நடாத்தப்பட்டது. கனம் யேசுதாசன் அருளுரையாற்றினுர். கனம் R. C. P. உவெல்ச் இரங்கலுரை வழங்கினுர்.

கனம் ஹிச்கொக் போதகர் அவர்கள் உடுப்பிட்டியில் ஊழியஞ் செய்த காலத்தில், உற்சாகமாக-அயராது உழைத்தார். எந்த இடமும் அவருக்கு ஏற்றதாயிருந்தது. மக்கள் நடுவில், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி, இனை வேறுபாடின்றி அன்புடன் பணியாற்றினுர். தனக்குக் கிடைத்த வாய்ப்புகளையும், நேரத்தையும் பயன்படுத்தி, நற்செய்திப்பணியைக் கண்ணுங்கருத்துமாய்ச் செய்து வந்தார்.

ஒரு நாள், இங்கிலாந்திலிருந்து மிசனெரி ஊழியத்திற்காகக் கப்பலில் புறப்பட்டார் ஒருவர், அவர் பயணஞ் செய்த கப்பல், கடலில் உடைந்த படியால், கடலில் நீந்தி மனித சஞ்சாரமற்ற தீவு ஒன்றில் தள்ளப்பட்டார். அவரின் பயணம் தடைப்பட்டது. ஆனுல், அவரின் இறை பணியார்வம் குன்றவில்லை. இத்தீவிலிருந்த பெங்குவின் பட்சிகளுக்குப் பிரசங்கஞ் செய்து ஞானஸ்நானம் கொடுத்தார். இதைப் போன்று, ஹிச்கொக் போதகருக்கு எத்தகைய துன்பங்கள், தொல்லைகள் வந்தாலும், அவை அவரின் ஊழியத்தைத் தடைசெய்ய வில்லை உற்சாகமாக இறுதிவரை ஊழியஞ் செய்தார்.

கருமமே கண்ணுகப் பணியாற்றிய சிறந்த பண்பாளர் அவர். எத்தகைய கைமாறும் கருதாது, தன் கடமையிலேயே ஊக்கமாயிருந்தார்'

''இயேசுவே நல்ல மேய்ப்பன்' என்பதை அவர். தம் வாழ்வில் அனுபவித்தபடியால், இந்த உண்மையை மக்களுக்கு, கருத்துடன் போதித்து வந்தார். இவரின் போதனைகள், கிறிஸ்தவர் அல்லாத மக்கள் மனத்தை அதிகமாகக் கவர்ந்தன.

'சினமடையாதே, சீறி விழாதே' என்பது பெரியோர் வாக்கு. இதனைப், போதகர் கடைப்பிடித்தார். அன்பும், பண்பும், ஆதரவும் மிக்கவர். ''அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'' என்ருர் பொய்யாமொழிப் புலவர். இவ் வாக்கிற்கு ஏற்ப, போதகர் அவர்கள், சினமடையாது, சீறி விழாது, அனைவர் பால் அன்பு செய்தார். தன்னை எதிர்த்தவர்களிலும் அன்பு சொரிந்தார்.

சபாசங்கத்தில் மற்றப் போதகர்மாரைப்போல், பெரும் பதவிகளை இவர் பெருவிடினும், தனது ஊழியத்தில் மனத்திருப்தியோடும் மகிழ்ச்சியோடும் பணி புரிந்த பக்திமான் இவர் என்பதற்கு நான். சாட்சி. தனக்கென வாழாது பிறர் நலத்தையே கருதி வாழ்ந்த உத்தமர் இவர், பிறர்படும் கஷ்டங்களைக் கண்டு கண்ணீர் சொரிந்து, தன்னுல் இயன்ற அளவு, போதகர் அம்மாவின் துணையுடன், பிறர் துயரத்தைத் துடைத்து, அவர்களை மகிழ்வித்தார். முன்பின் யோசியாமல் தாராள மனத்துடன் வறியவர்க்கு வழங்குவார். வள்ளன்மைக்கு இவர் ஒரு எடுத்துக்காட்டு. ''வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாது'' என்பது போதகரின் வாழ்க்கையில் முற்று முழுக்க உண்மை. (வளரும்)

## சமாதானப் பிரபு!

பாட்டாளியின் கூட்டாளியாய்
பாருக்கெல்லாம் ஒளி விளக்காய்
பாட்டாளியின் மகனுய், பாலகன்
—இயேசு
பாரில் இன்று வந்தபோது

சொந்தம் பந்தம் சொத்து
எல்லாம்
சோகக் கதையாய் முடிந்தது
எம் வாழ்வில்
சோதனையும், வேதனையும் எம்மை
கொல்லாமல் எம்வாழ்வை
வாட்டுது

விடுதலை விடுதலை பெண்களுக்கு
—என்று
வீதியிலும், மேடையிலும்
வீராப்புப் பேச்சு
விடுதலை உள்ளத்தில் கிட்டாத
காலம்வரை
பெண்ணே நீ காணமாட்டாய்
—விடுதலை

மது மயக்கப் பிடியில் மனைவி
மக்கள்
வறுமையில் வாடுது
மதுவெறியை, குள்ளநரிக்கூட்டம்
—தூண்டி
மக்கள் மதிமயங்கிச் சாகுது

சமுதாயப்பிணி தீர்க்கச்
சமாதானப்பிரபு
மன்னுருவானுர் பாரில்
—வாரீரோ
அவரை வாழ்த்துவோம்
வணங்குவோம்
உலகுக்குத் தீபமாய் ஏற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாரகை ஒளி:

**தன்னது வாயையும் நாவையுங் காப்போன்,**
**இடுக்கணுள் நின்றுதன் னின்னுயிர் காப்பான்.**

— நீதிமொழிகள்- 21: 23 —

## ஏனிங்கு யேசுவந்தார்.

ஆதியில் அன்று பூமியில் கண்ட
யூதமண் பீதினிலே
நீதியில் லாமல் நேர்மையில் லாமல்
பற்பலர் வாழ்ந்தனரே
வீதியில் நின்று விண்கதை பேசிக்
கும்மாளங் கொட்டினரே
பீதியில் லாது பித்தலில் ஆடிப்
புத்தியைக் கொன்றனரே.

பொய்யுடன் சேர்ந்த பொல்லாப்பு யாவும்
போற்றியே வந்தனரே
மொய்ப்புடன் வாழ்ந்த மோகத்தி னாலே
மோசங்கள் செய்தனரே
மெய்யுடல் வாட்டி மாண்பினைக் கொல்லும்
கள்ளினில் ஆடினரே
செய்திடல் என்ன என்றறி யாது
சூதினைப் போற்றினரே.

தாழ்ந்தவன் என்றும் உயர்ந்தவன் என்றும்
சாதிகள் பிரித்தனரே
வீழ்ந்தவன் என்றும் வாழ்ந்தவன் என்றும்
வேறுபா டாக்கினரே
ஆண்டவன் மீது அன்பேயில் லாது
தம்போக்கில் வாழ்ந்தனரே
மாண்டவன் போல மாபயம் இன்றி
இறைநிந்தை செய்தனரே.

அத்தனை குற்றம் அங்கத்த மண்ணில்
நின்றுநி லைத்ததனால்
நிந்தனை செய்து நேர்மைகு லைத்து
பற்பலர் வாழ்ந்ததனால்
வந்தனை இன்றி வேதம்ம றந்து
வாழ்க்கைஅ றுந்ததனால்
சிந்தனை கொண்டு தம்சித்தஞ் செய்தார்
விண்ணக ஆண்டவனார்.

சீர்கெட்டு வாழ்ந்த சந்ததி யாரின்
வாழ்வினை மாற்றிடவும்
பேர்கெட்டு மீளாப் பாவத்தில் ஊறும்
மாந்தரைக் காத்திடவும்
வேர்கெட்டு நிற்கும் மானிடப் பூண்டை
மீண்டும்வ ளர்த்திடவும்
நேர்கெட்டுப் போகாத் தன்மகன் தன்னை
பெத்லேமில் பிறக்கச்செய்தார்.

சத்தியங் கைவிட்டு வாழ்ந்திட்ட மக்கட்கு
சத்திய மாகவந்தார்
நித்திய ஜீவனை அற்றிங்கு வாழ்ந்தோர்க்கு
நித்திய ஜீவன்தந்தார்
பற்றிய மாஇருள் மீதில்சூ ருண்டோர்க்கு
பேரொளி யாகிநின்றார்
வற்றிய நற்பண்பு தெய்வீகம் அற்றோர்க்கு
மேசியா ஆகிநின்றார்.

நவாலியூர் சி.என். செல்லத்துரை.

## செய்திகள்:

### நன்றி செலுத்தும் ஆராதனை.

1.) உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. V.A. துரைராசா அவர்களின் வாழ்க்கை நலத்திற்காக நன்றி செலுத்தும் ஆராதனை, அவரின் இல்லத்தில், சபைக்குரு வண. D. C. இரத்தினசிங்கம் அவர்களின் தலைமையில், இம்மாதம் 18 ஆம் திகதி (18.12.89) மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது. இவ்வாராதனையில் வண. சேவக் சாம் அல்பிறட், வண .டி. ஆர். அம்பலவாணர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏழாலை வடக்குச் சபையைச் சேர்ந்த ஆசிரியர் திரு A. அருட்பிரகாசம் புகழ் அஞ்சலி செலுத்தினர். வண இரத்னசிங்கம் போதகர் அருளுரை ஆற்றினர். அமரர் துரைராசா அவர்களின் பிள்ளைகள் வேதப்பாடமும், சிறப்புப் பாடல்களும் பாடி, ஆராதனையை பக்தி மயமாக்கினர். இவர் 1914 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி பிறந்தார். 1989 நவம்பர் 17 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். இவரது பிறப்பிடமாகிய ஏழாலைவடக்குச் சபையிலிருந்து ஏராளமான மக்கள் இவ்வைபவத்தில் பங்கெடுத்தனர்.

2.) மானிப்பாய்ச்சபையைச்சேர்ந்தவரும், காலஞ்சென்ற வண. J.M. சிங்கநாயகம் அவர்களின் மனைவியுமாகிய திருமதி டொறத்தி தேவரத்னம் சிங்கநாயகம் அவர்களின் வாழ்க்கை நலனை நினைவு கூர்ந்து, நன்றி செலுத்தும் ஆராதனை கடந்த மாதம் 10 ஆம் திகதி மானிப்பாய்த்தேவாலயத்தில், வண. டி.. ஆர். அம்பலவாணர் சபைக்குரு வண. T. தேவநேசன் ஆகியோரால் நடத்தப்பட்டது. வண. அம்பலவாணர் அருளுரை ஆற்றினர். பண்டத்தரிப்புச் சபையைச் சேர்ந்த திருமதி வினுசிப்பிள்ளை புகழ் அஞ்சலி வழங்கினர். சபைப்பாடகர் குழுவினர் சிறப்புப் பாடல்களைப் பாடினர்.

3.) சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற வண. S.R. ஹிச்கொக் அவர்கள் மரித்த 50 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற நன்றி செலுத்தும் ஆராதனை, இம்மாதம் 5 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு, சாவகச்சேரித் தேவாலயத்தில் நடைபெற்றது. சாவகச்சேரிச் சபைப் போதகர் வண. V. இராஜ்குமார் ஆராதனையை, வண. சத்தியன் கதிர்காமர், வண. தேவ் ஆனந்தராசா ஆகியோரின் உதவியுடன் நடத்தினர். பேராயர் அருள்மிகு. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் அருளுரையாற்றினர். திரு. S.S. செல்லத்துரை புகழ் அஞ்சலி வழங்கினர். போதகர் அவர்களின் நினைவுக்கல் திரை நீக்கம், பேராயர் அவர்களால் செய்யப்பட்டது. திரு. A. கதிர்காமர் அனைவருக்கும் நன்றி செலுத்தினர். தேநீர் விருந்துபசாரனை அனைவர்க்கும் நடாத்தப்பட்டது.

### மரணம்:

#### திருமதி. திவ்வியதேவி ஞானனந்தம்

ஏழாலை-தெற்குச் சபையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. V. முருகேசு அவர்களின் மகளும் காலஞ்சென்ற திரு. ஞானனந்தம் அவர்களின் மனைவியுமாகிய திருமதி ஞா. திவ்வியதேவி இம்மாதம் 14 ஆம் திகதி (14.12.89), மாலைதீவில் காலமானர். இவர், கடந்த சில ஆண்டுகளாக மாலைதீவில் ஆசிரியப் பணியாற்றி வந்தார்.

இம்மாதம் 17 ஆம் திகதி, மாலை 3.00 மணியளவில், ஏழாலை வடக்கில் உள்ள இவரது இல்லத்தில், வண. டி. ஆர். அம்பலவாணர் அவர்களின் தலைமையில் இறுதியாராதனை நடத்தப்பட்டது. வண. A.V யேசுதாசன் புகழ் அஞ்சலி செலுத்தினர். வண. சேவக் சாம் அல்பிறட் அருளுரை ஆற்றினர். சிறப்புப்பாடல்கள் குடும்பத்தினரால் பாடப்பட்டன.

ஏழாலை-தெற்குக் கல்லறைத்தோட்டத்தில் அன்னரின் நல்லடக்க ஆராதனை வண. அம்பலவாணர், வண. V.N. தர்மகுலசிங்கம் ஆகியோரால் நடத்தப்பட்டது. வண. சாம் அல்பிறட் செபித்து ஆசீர்வாதம் வழங்கினர். அன்னரின் பிள்ளைகள் சகோதரருக்கு கடவுள் தாமே ஆறுதல் அளிப்பாராக.

### தமிழ்க் கலைச் சொல்லாக்கம்

தமிழ்மொழி எழுத்துச் சீராக்கல் நடைபெற்றுயிற்று. அடுத்து தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தின் தேவை நிறைவு செய்யப்படுதல் வேண்டும். தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபாடுள்ள தமிழ் நாட்டு அறிஞர்கள் சிலரை இலங்கைக்கு அழைத்து. இங்குள்ள அறிஞர்களுடன் கலந்துரையாடி, புதிய கலைச் சொல்லாக்கத்தை மேற்கொள்ள ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன என்று, இந்து கலாசாரத் தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு. பி.பி. தேவராஜா, சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற கலைச் சொல்லாக்கக் கருத்தரங்கில், தமது கருத்தினைத் தெரிவித்தார்.

### தீவுப்பகுதிச் சபைகளில்:- ஒளிவிழா.

கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை அறிவிக்கும் முகமாக இம்மாதம் 15-ம், 17-ம், 18-ம் திகதிகளில் முறையே நயினுதீவு, புங்குடுதீவு. வேலணை ஆகிய திருச்சபைகளில் ஒளிவிழா நடைபெற்றது. இவ்விழாவில் பாலர் பகல் பராமரிப்பு நிலையப் பிள்ளைகளும், ஓய்வு நாட்பாடசாலைப் பிள்ளைகளும் சேர்ந்து நிகழ்ச்சிகளை நடாத்தினர்கள். பாடல்கள், அபிநயப்பாடல்கள், சிறுகதைகள், நாடகங்கள் போன்றவை, சமுதாயத்திற்குப் படிப்பினை ஊட்டுவதாக அமைந்தது ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கூடாக, திறமைகளை வெளிக் கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கது. கிராமமே திரண்டு வந்து நிகழ்ச்சிகளைப்பார்த்து மகிழ்ந்தது.

நயினுதீவில் நடைபெற்ற விழாவில சட்டத்தரணியும், வைத்தியருமான திருவாளர் T. திருநாவுக்கரசு, சட்டத்தரணியும் ஓய்வுபெற்ற அதிபருமான திருவாளர் N. விசுவலிங்கம், கிராம சேவகரான திரு. S அம்பிகைபாலன்' ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். திருவாளர் N. விசுவலிங்கம் அவர்கள் பேசும் போது, அமெரிக்க சிலோன் மிஷன், குறிப்பாக, நயினுதீவிற்கு அன்று தொட்டு இன்றுவரை ஆற்றிய- ஆற்றிவருகின்ற கல்விப் பணிக்கு நாம் என்றும் நன்றி உடையவராக இருக்க வேண்டும் என்று கூறினர்.

புங்குடுதீவில் நடைபெற்ற வைபவத்தில் கத்தோலிக்கத் திருச்சபையின் பங்குத்தந்தையான வண. பிதா யூஜின் பிரான்சிஸ் அவர்கள் கலந்து கொண்டு ஒளி விழாவின் சிறப்பையும், பெற்றோர்களின் உத்தரவாதத்தையும் வற்புறுத்திக் கூறினர்.

வேலணையில் நடைபெற்ற விழாவில் வித்தகசிரோன்மணி திருமதி ஜீவா இரத்தினசபாபதி அவர்கள் பிரதம விருந்தினராகவும், அரசினர் வைத்தியசாலையின் அதிபர், டாக்டர். S. திருநாவுக்கரசு அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு உரையாற்றினர். ஒரு வயது கூட நிரம்பாத இப்பாலர் பகல் பராமரிப்பு நிலையம், இவ்வாறு உற்சாகமாக நடப்பாளாயின் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் அவள் ஓடித்திரிவாள் என்று கூறிய சிறப்பு விருந்தினர், பெற்றோர்களின் ஒத்துழைப்பையும், தென்னிந்தியத் திருச்சபையினர் யாழ். மறைமாவட்டத்தில் ஆற்றிவரும் நற்பணியையும் பாராட்டிப் பேசினர்.

பிள்ளைகளின் கிறிஸ்மஸ் பரிசுடனும், தேநீர் விருந்துடனும் ஒளி விழா இனிதே முடிவடைந்தது.

## குற்றமில்லாதவன்.

குற்றமில்லாதவன் கல்லெறியக்
கடவன்
குற்றம் நிறைந்தவன்
நானல்லவா.
பற்று நிறைந்தவன் சுற்றம்
மறந்தவன்
கற்றவன் என்று இறுமாப்புக்
கொண்டவன்
குற்றம் நிறைந்தவன்
நானல்லவா.
கற்றூணில் உன்னைக் கட்டிவைத்து
கசையால் அடித்தது என்
பாவமல்லவா
பொற்பரா நின் தலையினில்
முள்முடி
சூட்டி வதைத்த தென்
பாவமல்லவா
கள்வர்கள் மத்தியிலோர்
கள் வனைப்போல்
கட்டிவைத்தது என்
பாவமல்லவா
கொல் கொதா மலை மீது
குருசேற்றிக் கொன்றது என்
பாவமல்லவா
பாவமல்லவா - என்பாவமல்லவா
என்பாவமல்லவா.

பா. கிரான் ஜீவா.

## உதய தாரகை.

வாழ்க்கைச்செலவின் உயர்வினாலும், உதயதாரகையின் பக்கங்களின் அதிகரிப்பினாலும், உதய தாரகையின் ஆண்டுச் சந்தாவை 01-01-90 லிருந்து அதிகரித்துள்ளோம் என்பதை உதயதாரகை வாசக நேயர்களுக்கு அறியத் தருகிறோம்.

விபரம் வருமாறு:-

உள்ளூர்ச் சாந்தா — 100.00 ரூபா.

ஐரோப்பா, அவுஸ்திரேலியா, மலேசியா—10.00 பவுண்ட்ஸ் (வான் கடிதம்) அல்லது அதற்குச் சமமானது.

அமெரிக்கா, ஆபிரிக்கா-15.00 டொலர்ஸ். (வான்கடிதம்).

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் — 150.00 இந்திய ரூபா. (வான்கடிதம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Editorial.*

# The Jaffna Scene.

It was an austere Christmas by all standards this year. Unencumbered by outmoded traditions, the festival this year was celebrated generally on a low key by most churches and christian organisations, with hardly any evidence on the part of the old and the young of an intemperate mood or of a reckless holiday wallet. The commercial facade and superficial glaze were not the dominant traits this year in Jaffna, of a festvial which was celebrated at a time when the country is still plunged in an abysm of uncertainty and doubt as to what was in store for it's citizens as they enter the last decade of the 20th century.

Everything however is not dark and gloomy. The Jaffna people are not living permanently in a state of mental agony, with their minds pre - occupied only with their survival.

The sky that had remained obdurately overcast for some time has now definitely cleared and the farms are stirring with activity. With the morning mist yet settling on the landscape, farmers, with members of their family are seen in their little plots (of one acre or less), planting seed potatoes and onions or pouring water gently on the fledgling tobacco plants, (just transplanted) holding large earthen pots of water on one hand and filtering the water through the fingers of the other. The scenic effect is enhanced by flocks of white cranes, with protruding long legs, settling on the furrows to feast on the worms unearthed by the farmers, ploughing the portions yet awaiting the preliminary operations before the planting of seeds. The Jaffna farmer is an indefatigable worker and is also an optimist to the core.

It is said that during the CHILE Revolution, during the last decade of this century, a farmer in Chile working in his plot was asked by a staff Reporter of a leading Newspaper in the country what his views were on the current situation in the land. His reply was: "Sir, during a Revolution, some win and some lose but green plants must get enough water to survive" - The Jaffna farmer's philosophy is not very different.

The harvest this year promises to be good and the Thai Pongal festvial due in another fortnight is likely to have a special significance when the new earthen pots on the fire (with rice water and other sweet condiments) spill over, as a symbol of God's blessings to the farmer on his untiring efforts.

The crisis - oriented scene in our land, cannot swing the Jaffna man away from his anchorage in his faith in hard work and honest toil which will always have their reward:-

God does not expect us
To make the seed bear fruit
Jesus said to plant it
And pray that it will root.

( *Pandergraft* )


## COURSES AVAILABLE IN FURTHER EDUCATION PROGRAMME OF UDUVIL GIRLS' COLLEGE

1. Montessori Teacher Training.
2. Shorthand and Typewriting Tamil — English (Pitman & G.C.E (O/L) ).
3. Home economics — Cake Icing, Cake making, Dress making, Hair style.
4. English — NCE London, Sri Lanka
   Spoken English
   TOFL (if 5 Register)
5. Music — Carnatic — Vocal, Violin, Veena and Flute
6. Computer — Basic
   Cobol
   d Base III
   Lotus
   Word Processing and Local & Pitman London
7. German Language.
8. I.A.B.

Names must be registered on or before 5th January, 1990. Forms are not available, students may apply in writing.



## MORNING STAR

We wish to inform our readers that due to rising costs and the increase in the pages of the Morning Star we have revised the annual subscription as follows:

| | |
|---|---|
| **INLAND** | Rs. 100-00 |
| **EUROPE, AUSTRALIA & MALAYSIA** (Air Mail) | Pounds 10-00 or **Equivalent** |
| **U. S. & AFRICA** (Air Mail) | Dollars 15-00 |
| **INDIA, PAKISTAN & BANGLADESH** (Air Mail) | Indian Rs. 150-00 |


**NAVAJEEVANAM .........**

( continued from page 1 )

who were on an assignment at Navajeevanam during 1979-80 paid a visit to Navajeevnaam in November. Mr. Newby declared open the Carpentry Workshop established by Navajeevanam in Tharmapuram at which the 10 students enrolled as students were introduced to him. The Workshop also serves as a training school, the instructor being a qualified diploma holder from the Technical Institute, Vaddukoddai.

# New WCC Mission Director Notes Priorities Ahead

*THE REV. DR. C. DURAISINGH*

SAN ANTONIO—Equipping congregations for mission, drawing out mission implications of the vitality of new Christian movements and transforming international mission relations are three priorities for the Commission on World Mission and Evangelism of the World Council of Churches in the coming years, according to Christopher Duraisingh. The 51 - year - old (United) Church of South India theologian since 1985 general secretary of the London - based Council for World Mission, becomes C W M E. director 1 August succeeding the retiring Eugene Stockwell.

Speaking here on the last day (31 May) of the W. C. C. World Conference on Mission and Evangelism, the director-designate called 'universality and inclusiveness' the most significant mission emphases to emerge from its discussions. A practical implication of that for C W M E, he said is more inclusive participation in its work, 'among other things greater dialogue and conversation with evangelicals and enhanced participation of the Orthodox.'

Whether or not the next world mission conference is jointly sponsored by the W. C. C. and global evangelical groups as some have suggested, 'both streams of missiological thinking and practice ought to influence each other more directly.

He said the Lausanne commitee for World Evangelization has 'had an impact on us already by calling us to a clearer articulation of the specificity of the gospel, the decisiveness of God's love in Jesus Christ. We need to explore jointly what that means'. At the same time, the ecumenical movement 'would want to affirm that concern for planting churches in every part of the world is to be critiqued by an understanding of God's will for all people'.

He called for similar mutual support and critique between mission and interfaith dialogue in the ecumenical movement.

Duraisingh was asked if he believes Jesus Christ is 'the only way' to salvation. He replied that he would say 'unequivocally that in Jesus of Nazareth we have been given decisive knowledge of the love of God; and that it is incumbent on me to witness to that, so that all may come to a saving knowledge of Jesus Christ.

'The Bible clearly calls me to witness to this reality', he continued. 'But I don't want to move from the witness stand to the judge's bench' and use the affirmation of God's decisive revelation in Jesus Christ as a criterion by which to judge those who do not make this affirmation.

Duraisingh said the missiological accent today should fall on 'bringing the peripheral people within the city gate God brings the marginalized to centre stage, through the work of Jesus Christ, who died outside the gates'.

*By Courtesy: S I. Churchman.*

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 29 .December 1989 and published by The Rev. T. THEVANESAN, 182, First Cross Street Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org